# பண் முறைமையிலிருந்து இராக முறைமைக்கான வரலாற்றுப் படிநிலைகள்

முனைவர் மீரா வில்லவராயர்

இந்திய இசையில் தற்காலத்தில் இராகங்கள் என்று அழைக்கப்படும். இனிய இசை பழந்தமிழ் மக்களால் பண்கள் என அழைக்கப்பட்டன. வரன்முறை செய்யப்பட்ட அல்லது பண் படுத்தப்பட்ட இசை 'பண்' என்பதாயிற்று. பண்ணுதல் என்றால் இயற்றுதல் அல்லது செய்தல் என்று பொருள். பண் என்பதற்குப் பொருளாக பஞ்சமரபு என்ற இசை இலக்கண நூலில்

"பாவோடணைத லிசையென்றார் - பண்ணென்ற
நோவாப் பெருந்தான மெட்டாலும் - பாவா
யெடுத்தல் முதலாவிரு நான்கும்
பண்ணிற் படுத்தமையாற் பண்ணென்று பார்"

(பஞ்சமரபு, இசைமரபு, வெண்பா - 50)

என்று தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் முதலிய எட்டுத் தானங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலிய எட்டுக் கிரியைகளாலும் பிறப்பித்து ஓசைப்படுத்தலாற் 'பண்' என்று பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது.

பண் என்பதற்கு அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், சீர், தகுதி, நிந்தை, நிறை நரம்புள்ள வீணை எனப் பல பொருள்கள் தமிழ் மொழி அகராதியில் தரப்பட்டுள்ளது. பண் என்பது பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறையாகும். ஒலி செம்மையான முறையில் ஒழுங்கான இசையமைப்புடன் பாடல்களில் ஒலி உருவமாக அமைவது பண்ணாகும்.

பண்படுத்தப்பட்ட இவ்விசையொலித் தொடர்கள், வடமொழியில் அமைந்த 'இராகம்' என்ற சொல்லோடு ஒத்தமைகிறது. 'இராகம்' என்ற சொல் மதங்கரின், பிருகத்தேசி (5ஆம் நூற்றாண்டு) என்ற வடமொழி நூலில் முதன்முதலில் காணப்படுகின்றது. இவர் இராகம் என்பதன் விளக்கமாக "அழகிய கமகங்களோடு கூடிய சுரக் கூட்டங்கள்" என்றும் "மக்கள் கேட்டு இன்புறும் தன்மையது" என்றும் கூறுகிறார். இராகம் என்ற சொல் ஒரு சில பண்களின் பெயர்களில் இணைப்பாகக் காண முடிகிறது. சான்றாக அராகம், தக்கராகம், பழந்தக் கராகம், நட்டராகம், மேகராகக் குறிஞ்சி போன்ற பண்களைக் குறிப்பிடலாம்.

தமிழிசை வரலாற்றை ஆராயும்போது 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் அருளப்பட்ட தேவாரங்களே முதன் முதலாக நமக்குக் கிடைத்த பண், தாள அமைப்புடன் கூடிய இசை வடிவங்களாகும். தேவாரப் பாடல்களே பண்களில் அருளப்பட்ட முதன்மைப் பாடல்களாக நமக்கு கிடைத்துள்ளபோதிலும் சங்கப் பாடல்களும் பண்முறைக்கேற்ப பாடப்பட்டன என்பதை பல அகச்சான்றுகள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது.

## சங்க இலக்கியத்தில் பண்கள்

சங்க காலத்தில் திணைகள் வகுக்கப் பெற்று அவற்றிற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன வரையறை செய்யப்பட்டிருந்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக்குரிய 14 கருப்பொருள்களை உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றில் ஒன்று 'பண்' ஆகும். சங்க இலக்கியம் இப்பண்ணை பாலை, யாழ் என்று குறிக்கின்றது. சங்க இலக்கியப் பண்ணைப் பற்றி உரையாசிரியர்கள் குறிப்பிடும் போது 'நாற்பெரும் பண்கள்' எனக் குறிப்பிடுகின்றனர். அவை குறிஞ்சிப் பண், மருதப்பண், செவ்வழிப்பண், பஞ்சுரப் பண் என்பனவாகும். இந்நான்கு பண்களும் முல்லை தவிர ஏனைய நிலங்களுக்கு உரியனவாகும்.



Scanned by CamScanner

'முல்லைப் பண் பற்றிய சான்றுகள் பரவலாகப் பயன்படுத்தப் பெறாத நிலையில் ஏனைய நான்கு பெரும் பண்கள் பற்றிய அகச்சான்றுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. இந்நான்கு பெரும் பண்களும் தற்காலத்தில் வழக்கிலிருக்கும் தாய் இராகம் (மேள இராகம்) போல செயற்பட்டிருக்க வேண்டும். சங்க இலக்கியத்தில் பண் பற்றிய செய்திகளில் பாலை, பண், யாழ் என்னும் பெயர்களோடு திறம் என்னும் சொல்லும் இடம்பெறுகிறது. திறம் என்பது ஏழு சுரங்களில் குறைந்த சுரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

பகுக்கப்பட்ட பெரும் பண் பாலை எனப் பொருள்படும். நாற்பெரும் பண்களிலிருந்து ஏழ்பெரும் பாலைகள் பகுக்கப்பட்டுள்ளன. அவையாவன செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம் பாலை, இப்பண்கள் தவிர எண்ணிக்கையில் குறைந்த சுரங்களையுடைய திறம் (ஔடவம்), திறத்திறம் (ஸ்வராந்தரம்), பண்ணியற்றிறம் (ஷாடவம்) ஆகியனவும் தோன்றியுள்ளன.

சங்க காலத்திலே பண்கள் உரிய காலங்களுக்கேற்ப பாடப்பட்டன என்பதனை சான்றுகள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

எடுத்துக்காட்டு:

மருதப்பண்

மருத நிலத்தில் காலைப் பண்ணாகிய இப்பண்பற்றி

"சீரினிது கொண்டு நரம்பினிது இயக்கி
யாழோர் மருதம் பண்ண
புலர்ந்து விரி விடியலெய்த

(மதுரை 657-658)

என மதுரைக்காஞ்சி கூறுகின்றது.

செவ்வழிப்பண் மாலையில் பாட உகந்தது என்பதனை பல சங்கப் பாடல்கள் வாயிலாக அறிகின்றோம்.

"அருளே யகளோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழுநின்
காரெதிர் கானம் பாடினே மாக"

(புறநானூறு 144:1:3)

"பாலை யாழொடு செவ்வழிப்பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்"

என்னும் அப்பர் சுவாமிகளின் தேவாரத்தின் வாயிலாகவும் அறியலாம்.

சங்க காலத்தில் காலங்களுக்கேற்ப பண்கள் பாடப்பட்டன என்பதனையும் அப் பண்கள் பகல்பண்கள், இரவுப்பண்கள், பொதுப்பண்கள் என வகைப்படுத்தப்பட்டதாகவும் அறிகிறோம். பிற்காலத்தில் இராகங்களை கானகாலத்திற்கேற்ப வகைப்படுத்தும் முறைக்கு இது வழிகோலியது எனலாம்.

சங்க இலக்கியங்களில் 14 பண்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. அவை யாவன குறிஞ்சி, முல்லை, மருதம், செவ் வழி, பாலை, நைவளம், நோதிறம், பஞ்சுரம், ஆம்பல், காமரம், காஞ்சி, படுமலை, விளரி, காந்தாரம் என்பனவாகும்.

குறிப்பிட்ட பண்ணின் பெயர் இடம் பெறாமலும் பண் பொதுப் பெயராக சங்க இலக்கியங்களில் பல இடங்களில் இடம் பெறுகின்றது.

எடுத்துக்காட்டு:

1. பண்ணினால் களிப்பிக்கும் பாணன் காட்டு என்றானோ - கலி 72:10
2. பண்கொளற்கு அருமை நோக்கி - புறம் 307:13
3. மண் அகம் முழவின் பண் அமை சீறியாழ் - பொரு 107

பரிபாடலில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இயற்புலவர். இசையமைத்தவரின் பெயர். பாடப்பட்ட பண்ணின் பெயர் என்பன தரப்பட்டுள்ளன.



Scanned by CamScanner

எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| பாடல் எண் | - 14 |
| பாடுபொருள் | - செவ்வேள் |
| ஆசிரியர் | - கேசவனார் |
| இசையமைத்தவர் | - கேசவனார் |
| பண் | - நோதிறம் |

பரிபாடலில் இன்று நமக்கு கிடைத்துள்ள 22 பாடல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல் மற்றும் 22ஆம் பாடலைத் தவிர எஞ்சியுள்ள 20 பாடல்களில் வாழ்த்துப் பாடல்கள் பண் பாலையாழிலும் 5 பாடல்கள் பண் நோதிறத் திலும் மற்றும் 4 பாடல்கள் காந்தாரப் பண் ணிலும் பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

சிலப்பதிகார அரும்பதவுரையில் (12ஆம் நூ) ஆதியிசை 11, 991 எனக் குறிப்பிடப்படுகின்றது. ஆதியிசை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்ணமைதி கொண்டது என்ற கருத்து உள்ளது இவ் 11, 991 ஆதியிசைகளைத் தொழிற் படுத்திப்பாடுவது சாத்தியமில்லையாதலால் நாளடைவில் படிப்படியாகக் குறைக்கப்பட்டு பாடுவதற்குரிய பண்கள் 103 ஆகியது என்ற கருத்துண்டு. இவ்வாறு பண்கள் வரையறுக்கப் பட்ட காலம் ஜெயங்கொண்ட சோழன் காலம் எனக் கூறப்படுகின்றது. பண்களாவன பாலையாழ் முதலிய நூற்றிமூன்று என்பார் திருக் குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் (12ஆம் நூ). இந்த 103 பண்களின் பெயர்கள் சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு முதலான நிகண்டுகளில் காணப்படுவதால் 103 பண்கள் வரையறை செய்யப்பட்ட காலம் 10ஆம் 11ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

## காரைக்காலம்மையார் கையாண்ட பண்கள்

சங்க இலக்கியங்களில் 14 பண்களும் பிற்காலத்தில் எழுதப்பட்ட நிகண்டுகளில் 103 பண்களின் பெயர்களும் குறிப்பிட்டுள்ளன. ஆயினும் சைவநாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகப் போற்றப்படும் காரைக் காலம்மையார் (5ஆம் நூற்றாண்டு) அருளிய அற்புத திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு ஆகிய நான்கினுள் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் முறையே நட்டபாடை பண்ணிலும் இந்தளப் பண்ணிலும் பாடப்பட்டன. 103 பண்கள் வழக்கத்திலுள்ள போதிலும் இவ்விரு பண்ணிலும் மாத்திரம் அம்மையார் பாடல இயற்றியிருப்பது ஆய்விற்குரிய விடயமாகும். ஆயினும் அம்மையார் கையாண்ட நட்டபாடை பண்ணிலேயே திருஞானசம்பந்தர் முதன் முதலாக அருளிய "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் பதிகம் அமைந்திருப்பதும் சுந்தரமூர்த்தி நாயனார் முதன்முதலாக அருளிய "பித்தா பிறை சூடி பெருமானே" என்னும் தேவாரப் பதிகம் அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பண்களின் பெயர்கள் இராகப் பெயர்களாக் கருநாடக இசையில் மாற்றி யமைக்கப்பட்டபோது நட்டபாடை பண்ணிற்குரிய இராகமான கம்பீர நாட்டை இசைக் கச்சேரிகள், நாட்டியக் கச்சேரிகள், கதா காலட்சேபம் முதலான நிகழ்ச்சிகளில் ஆரம்பித்தில் பாடுவதற்குப் பொருத்தமான இராகமாகக் கருதப்படுகின்றது. கோயில்களில் சுவாமி புறப்படும்போது வாசிக்கப்படும் "மல்லாரி" இசை கம்பீர நாட்டையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அம்மையார் கையாண்ட இந்தளப்பண் கருநாடக இசையில் மாயாமாளவகௌளை என அழைக் கப்படுகின்றது. இப்பண் அல்லது இராகம் தென்னிந்திய இசை வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கின்றது. மாணவர்கள் இசைபயிலத் தொடங்கும்போது ஆரம்ப இசைப் பயிற்சிகளை மாயாமாளவகௌளை இராகத்தில் பயில வேண்டுமென கர்நாடக சங்கீத பிதாமகராகிய புரந்தரதாஸர் இந்தளப் பண்ணிற்கு இணையான மாயாமாளவ கௌளை இராகத்திலேயே ஆரம்ப



Scanned by CamScanner

அப்பியாச வரிசைகளை இயற்றினார். சங்கீதமும் மூர்த்திகளுள் ஒருவராகிய முத்துஸ்வாமி தீட்சிதரும் முதன் முதலில் இயற்றிய "ஸ்ரீநாதாதி குருகுஹ" என்னும் கிருதியும் தீட்சிதரின் சீடர்களாகிய தஞ்சை நால்வருள் ஒருவராகிய பொன்னையா முதன் முதலில் குரு காணிக்கையாகப் பாடிய "மாயாதீர்த்த ஸ்வரூபிணி" என்னும் கீர்த்தனையும் மாயாமாளவகௌளை இராகத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### தேவாரங்களில் பண்கள்

நூற்றி மூன்று பண்களிலும் பாடப்பட்ட தேவாரப் பாடல்கள் தற்போது நமக்குக் கிடைத்தில. தேவார முதலிகளாகிய திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் (7ஆம், 8ஆம் நூற்றாண்டு), சுந்தரமூர்த்திநாயனார் (9ஆம் நூற்றாண்டு) ஆகியோரால் அருளப்பெற்ற தேவாரங்களுள் நமக்குக் கிடைத்திருப்பவை 23 பண்களில் அமைந்த தேவாரங்களே. இவ் 23 பண்களுள் சம்பந்தர் 22 பண்களிலும் அப்பர் 10 பண்களிலும் சுந்தரர் 17 பண்களிலும் தேவாரங்களை அருளியுள்ளனர். 103 பண் களிலும் குறிப்பிடப்படாத யாழ்முரிப் பண்ணில் (அடானா) சம்பந்தர் பெருமான் "மாதர் மடப்பிடியும்" என்னும் தேவாரத்தை அருளியமை குறிப்பிடத்தக்கது. இவ் 23 பண்களும் அவற்றிற்கு இணையான இராகங்களும் வருமாறு:

| பண் | இராகம் |
|---|---|
| 1.செவ்வழி | யதுகுலகாம்போதி |
| 2.தக்கராகம் | காம்போதி |
| 3.தக்கேசி | காம்போதி |
| 4.புறநீர்மை | பூபாளம் |
| 5.பஞ்சமம் | ஆஹிரி |
| 6.நட்டபாடை | நாட்டை |
| 7.அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| 8.காந்தாரம் | நவரோசு |
| 9.பியந்தைக்காந்தாரம் | நவரோசு |
| 10.கொல்லி | நவரோசு |
| 11.கொல்லிக் கௌவாணம் | நவரோசு |
| 12.பழம்பஞ்சுரம் | தீரசங்கராபரணம் |
| 13.மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| 14.பழந்தக்கராகம் | ஆரபி, சுத்தசாவேரி |
| 15.குறிஞ்சி | ஹரிகாம்போதி |
| 16.நட்டராகம் | பந்துவராளி |
| 17.சாதாரி | பந்துவராளி |
| 18.வியாழக்குறிஞ்சி | சௌராட்டிரம் |
| 19.செந்துருத்தி | மத்தியமாவதி |
| 20.இந்தளம் | மாயாமாளவகௌளை |
| 21.காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| 22.கௌசிகம் | பைரவி |
| 23.சீகாமரம் | நாதநாமக்கிரியை |

பண் ஆராய்ச்சி மாநாடுகளிலேயே இந்த 23 பண்களையும் ஓதுவார்கள். மரபுவழி பாடிக்காட்டி அவை இக்காலத்தில் இராகங்களுக்கு இணையாகக் கொள்ளப்பட்டன.

பழந்தமிழ்ப் பண்களின் பெயர்கள் காலப்போக்கில் பெயர் மாற்றியழைக்கப் பெற்றன. இதனால் தேவாரப்பண்களை இராகப் பெயர்களைக் கொண்டு இனங்காண வேண்டிய நிலை ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கியிருந்ததைத் திருவா வடுதுறை ஆதீன ஏட்டுப் பிரதி ஒன்று அறியத் தருகின்றது. இந்த ஏட்டுப் பிரதியில் பண்களுக்குரிய இராகப் பெயர்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

பகற்பண்கள்

| பண் | இராகம் |
|---|---|
| புறநீர்மை | ஸ்ரீகண்டி |
| காந்தாரம், பியந்தை | இச்சிச்சி |
| கௌசிகம் | பயிரவி |
| இந்தளம், திருக்குறுந்தொகை | நௌிதபஞ்சமி |
| தக்கேசி | காம்போதி |
| நட்டராகம், சாதாரி | பந்துவராளி |
| நட்டபாடை | நாட்டைக்குறிஞ்சி |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |



Scanned by CamScanner

| | |
|---|---|
| காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| பஞ்சமம் | ஆகிரி |

இராப்பண்கள்

| பண் | இராகம் |
|---|---|
| தக்கராகம் | கன்டகாம்போதி |
| பழந்தக்கராகம் | சுத்தசாவேரி |
| சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| கொல்லி, கொல்லிக்கௌவாணம், திருநேரிசை,திருவிருத்தம் | சிந்துகன்னடா |
| வியாழக்குறிஞ்சி | ஸௌராட்டிரம் |
| மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| குறிஞ்சி | மலகரி |
| அந்தாளிக்குறிஞ்சி | ஸைலதேசாட்சி |

பொதுப்பண்கள்

| பண் | இராகம் |
|---|---|
| செவ்வழி | எதுகுலகாம்போதி |
| செந்துருத்தி | மத்தியமாவதி |
| திருத்தாண்டகம் | பியாகட |

பண்களுக்கு நேரான கருநாடக இசை இராகங்கள் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து இராகங்களைக் கொண்டு பதிகப்பண்களை இனங்கண்டு பாடும்முறை இவ்வேடு எழுதப்பெற்ற கி.பி.17ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்தமை தெரிகின்றது.

## பண்களின் வகைப்பாடு

தமிழிசை இலக்கணத்தில் பண், திறம் என்ற இரு வகைப்பாடுகள் உள்ளன. பண் என்பது பொதுவாக எல்லா இராகங்களையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். ஆயினும் பண்களை வகைப்படுத்தும்போது பண் ஏழு நரம்புகளைக் கொண்டது என்றும் திறம் அதனிலும் குறைந்த நரம்புகளைக் கொண்டது என்றும் திவாகர நிகண்டிலிருந்து அறிய முடிகின்றது.

"நிறை நரம்பிற்கே பண் ணெனலாகும்
குறை நரம்பிற்கே திற மெனப்படுமே"

தற்போது ஏழு நரம்புகள் (சுரங்கள்) உள்ள பண் சம்பூர்ண இராகமென்றும் அதினிலும் குறைந்த சுவரங்கள் கொண்ட திறம் ஜன்ய இராகமென்றும் அழைக்கப்படுகின்றன. திறம் அதன் நரம்புகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன:

| திறப்பிரிவு | இராகப்பிரிவு |
|---|---|
| 1.பண்ணியற்றிறம் | சாடவம் |
| 2.திறம் | ஔடவம் |
| 3.திறத்திறம் | சதுர்த்தம் (ஸ்வராந்தரம்) |

## 103 பண்களின் வகைப்பாடு

பஞ்சமரபு உரையில் 103 பண்கள் மூன்று விதங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

(அ) பண், பண்ணியற்றிறம், திறம், திறத் திறம் - இம்முறையை பின்வரும் பஞ்சமரபு வெண்பா விளக்குகின்றது.

*"பண்ணோர் பதினேழாம் பண்ணியல் பத்தேழாம்*
*எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப - நண்ணிய*
*நாலாந் திறத்திறமோர் நான்கு முளப்படப்*
*பாலாய பண்ணூற்று மூன்று"*

| | |
|---|---|
| ஏழு நரம்புகள் கொண்ட பண்கள் | - 17 |
| ஆறு நரம்புகள் கொண்ட பண்கள் | - 70 |
| ஐந்து நரம்புகள் கொண்ட திறங்கள் | - 12 |
| நான்கு நரம்புகள் கொண்ட திறத்திறங்கள் | - 04 |
| மொத்தம் | 103 பண்கள் |

இவ்வாறு 103 பண்களை வகைப்படுத்திக் கூறிய முதல் இசை இலக்கண நூல் பஞ்சமரபாகும்.



Scanned by CamScanner

(ஆ) "நாற்பெரும் பண்ணும் சாதிநான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப்படும்"

என்னும் பஞ்சமரபு உரையும், சிலப்பதிகார உரைமேற்கோளும் பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் என்ற நாற்பெரும் பண்கள் அவற்றின் திறங்கள் - நால்வகைச் சாதியான அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல், இவற்றின் வழியாகப் பிறக்கும் 103 பண்களை உணர்த்துகின்றன எனக் கருதலாம். பண்கள் ஒவ்வொன்றும் அகம், புறம், பெருகு ஆகியவற்றைச் சேர்க்க வரும் 16 பண்களோடு 'தாரப்பண்' என்ற பண்ணும் சேர்ந்து 17 பண்களாகின்றன. இவை ஏழு சுவரங்களைக்கொண்ட பண்களாகும். நாற்பெரும் பண்களுக்கும் 21 திறங்கள் உள்ளன. அவை வருமாறு:

| | |
|---|---|
| பாலை யாழ்த்திறன் | - 5 |
| குறிஞ்சி யாழ்த்திறன் | - 8 |
| மருத யாழ்த்திறன் | - 4 |
| செவ்வழி யாழ்த்திறன் | - 4 |
| | 21 |

இருபத்தொரு திறங்கள் ஒவ்வொன்றிலும் அகம், புறம், அருகு, பெருகு வகைக் கூறுகள் சேர்க்க மொத்தம் 84 பண்களாகின்றன. இவற்றோடு முன்னர் கூறிய 17 பண்களும் பையுள் காஞ்சி, படுமலை என்ற இரண்டு பண்களையும் சேர்க்க 103 பண்களாகின்றன. (17+84+02=103)

(இ) செம்பாலை, படுமலைப் பாலை முதலிய ஏழு பாலைகளிலும் பிறக்கும் பண்கள் மொத்தம் 103 ஆகின்றன.

| | |
|---|---|
| செம்பாலையுள் பிறக்கும் பண்கள் | - 08 |
| படுமலைப்பாலையுள் பிறக்கும் பண்கள் | - 22 |
| செவ்வழிப்பாலையுள் பிறக்கும் பண்கள் | - 12 |
| அரும்பாலையுட் பிறக்கும் பண்கள் | - 26 |
| கோடிப்பாலையுட் பிறக்கும் பண்கள் | - 12 |
| விளரிப்பாலையிற் பிறக்கும் பண்கள் | - 05 |
| மேற் செம்பாலையிற் பிறக்கும் பண்கள் | - 18 |
| | 103 பண்கள் |

(ஈ) மேலும் பண்கள் கீழ்கண்டவாறும் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

வெளிப்படுவன, வெளிப்படாதன, ஒலிக் குரியன, வன்மைக்குரியன, மென்மைக்குரியன. இவ்வகைப்பாடு தற்காலத்தில் வழங்கும் இராக வகைப்பாடுகளுடன் ஒத்த தன்மையுடையவையாக விளங்குகின்றன.

(1) வெளிப்படும் பண்கள் - எல்லோராலும் பாராட்டப்பெற்று வழக்கில இருக்கும் பண். இவை 19. இவை தற்காலத்து பிரபல்யமான இராகங்களுக்கு ஒப்பானவை. வேங்கடமகியவர்கள் சதுர் தண்டிப்பிரகாசிகை (17ஆம் நூற்றாண்டு) என்னும் நூலில் பிரசித்தமான இராகங்கள் 19 (கல்பித மேளங்கள்) எனக்குறிப்பிட வழிகோலியது எனலாம்.

(2) வெளிப்படா பண் - இசை வல்லுநரால் ஏதோ ஒருசமயம் மட்டும் பாடப்படும் பண். இவை 17. இவை தற்காலத்து அபூர்வ இராகங்களுக்கு ஒப்பானவை.

(3) ஒலிக்குரியனவாய பண்கள் - கம்பீரமான பண்கள். இவை 6 பண்களாகும். இவை கன இராகத்திற்கு ஒத்தன.

(4) வன்மைக்குரியனவாய பண்கள் - பெரிய இசைகளாக அமைந்த சிறப்பாக ஏழிசையும் கொண்ட பெரும் பாலைகளும் ஒரு சில ஆறிசைப் பண்களும் ஒரு சில



Scanned by CamScanner

ஐந்திசைப் பண்களுமாகும். இவை 20. இவை தற்காலத்து நய இராகத்திற்கு ஒத்தன.

(5) மென்மைக்குரியனவாய பண்கள் - சிறிய இசைகளாக அமைந்து வரும் பண்கள். இவை 6 பண்களாகும்.

இவை தேசிய இராகங்களுக்கு ஒத்தன.

இவற்றைவிட குறிப்பிட்ட நேரத்தில் அதற்குரிய பண்களைப் பாடினர் என்பதனை பண்டைக்கால இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறியலாம். பஞ்சமரபில் சிறுகாலை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, அரையிருள் யாமம், யாமம், வைகறை என்ற எட்டுக் காலங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்குரிய தெய்வம், அக்காலங்களில் பாடக்கூடிய பண்கள் என்பன விவரமாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு காலத்திற்கேற்ப இராகங்களைப் பாடும் முறை பற்றி குறிப்பாக நாரதரின் சங்கீத மகரந்தத்திலும் (11ஆம் நூற்றண்டு) சோமநாதரின் இராக விபோதத்தில் (17ஆம் நூற்றாண்டு) இராகங்களுக்குரிய ஆதி தெய்வங்களும் நிறங்களும் கூறப்பட்டுள்ளமை பண்முறை வகுப்போடு ஒப்பிடக்கூடியது.

மேலும் தற்காலத்தில் ஜன்ய இராகத்தில் உட்பிரிவுகளாகிய வர்ஜ, வக்ர, உபாங்க, பாஷாங்க, நிஷாதாந்திய, பஞ்சமாந்திய இராக வகைகளும் பழைய பண்ணிசை வழிவந்த பண்களில் காணலாம். எடுத்துக்காட்டு:

| இராக வகை | பண் |
|---|---|
| உபாங்க இராகம் | காந்தாரபஞ்சமம், புறநீர்மை |
| பாஷாங்க இராகம் | கௌசிகம், தக்கேசி |
| வர்ஜ இராகம் | புறநீர்மை, பழந்தக்க ராகம் |
| வக்ர இராகம் | மேகராகக்குறிஞ்சி |
| நிஷாதாந்திய இராகம் | சீகாமரம் |
| பஞ்சமாந்திய | கொல்லி |

பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த பண் என்ற சொல் பிற்காலத்தில் இராகம் என மருவி வந்ததாகவும் அக்கால வழக்கிலிருந்த பண்களின் வகைப்பாடு பிற்கால இராகப் பிரிவுகளுக்கும் வழிகோலியது எனக் கூறலாம்.

**அடிக்குறிப்புகள்**


1. இ.அங்கயற்கண்ணி, தமிழக இசையும் ஆய்வும், ப-81
2. இரா.கலைவாணி, சு.தமிழ்வேலு, சங்க இலக்கியத்தில் இசை, ப-113
3. து.ஆ.தனபாண்டியன், இசைத்தமிழ் வரலாறு பகுதி -1, ப-204
4. மேலது ப-229
5. இ.அங்கயற்கண்ணி, பஞ்சமரபில் இசைமரபு, ப-98
6. பொன். ஓதுவார்மூர்த்திகள், தேவாரப் பண்கள், Annamalai University Journal Volume 1. No.02
7. தாண்டவராய முதலியார், சேந்தன் திவாகரம், ப-123
8. இ.அங்கயற்கண்ணி, பஞ்சமரபில் இசைமரபு, பக். 90-93


2010ஆம் ஆண்டின் இலங்கை அரசாங்கத்தின் சாகித்ய மண்டலம் பரிசிலை கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினர்கள் கலைச்செல்வன் அவர்கள் தனது ***"மனித தர்மம்"*** நூலுக்காகவும், திரு.இ.சடகோபன் அவர்களின் தனது ***"கசந்த கோப்பி"*** நூலுக்காகவும் பெற்றுக் கொண்டனர்.



Scanned by CamScanner